


அடையாறு இஷ்டசித்தி விநாயகர் ஆலயத்தில், டி.எம். கிருஷ்ணாவின் பிள்ளையார் சதுர்த்தி ஈவ் (eve) கச்சேரி... காம்போதியில் அவர் பாடிய மைசூர் வாசுதேவாச்சார்யாரின் 'லம்போதரம் அவலம்பே' அபூர்வமாகவே கச்சேரிகளில் கேட்கக் கிடைக்கும். அதைவிட அபூர்வம், ஆவர்த்தனத்துக்குப் பிறகும் பிள்ளையார் பற்றிய பாடல்கள் கேட்கக் கிடைப்பது... கிருஷ்ணா அன்று அவற்றைப் பாடினார். அதைவிட, அதைவிட அபூர்வம், 'ஸ்ரீகண நாத' என்கிற ஆரம்ப இசைப் பயிற்சி கீதத்தைக் கச்சேரியில் பாடக் கேட்பது... குழந்தைக் கடவுள் என்பதால், தாமும் அதைவிட அதைவிட குழந்தையாகி, கிருஷ்ணா 'ஸ்ரீகணநாத' என்று பாலகீதம் பாடி மகிழ்ந்தார் போலும்!

\- தும்புரு

*Kalki* - 10 October 2004